1970 மார்ச் 5]

கிருஷ்ணம்பேட்டை தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள்

* 215 வினா—திரு. எம். பூபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, கிருஷ்ணம்பேட்டை, நடேசன் தெருவில் 10—3—1969-ம் தேதி நேர்ந்த பயங்கர தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பாதிக்கப்பட்ட குடும்பங்கள்—307.

திரு. எம். பூபதி : பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ? எவ்வளவு பேர்களுக்கு எந்த அளவிற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : பாதிக்கப்பட்ட 307 குடும்பங்களில் 89 பேர்கள் அந்தக் குடிசைகளுக்குச் சொந்தக்காரர்கள். மீதியுள்ளவர்கள் அங்கு குடியிருந்தவர்கள். குடிசைச் சொந்தக்காரர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் 80 ரூபாயும், முதல் அமைச்சர் அவர்களின் நகர தீ விபத்து நிதியிலிருந்து 120 ரூபாயும் ஆக ரூ. 200 வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு துணிமணிகள் வாங்குவதற்காக உதவித் தொகை கொடுக்கப்பட்டது. இதல்லாமல் சென்னை குதிரைப் பந்தயத்தார் அவர்களாக மனமுவந்து அளித்த ரூ. 10,001-ஐக் கொண்டு கலெக்டர் அவர்கள் மூலம் கைத்தறி ஆடைகள் வாங்க வழங்கப்பட்டது.

Loans for potato cultivation

* 216 Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether there is anw proposal to increase the potato loan from Rs. 400 to Rs. 900 per acre under the Potato schemes introduced at Hosur and Kodaikanal; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : (அ) & (இ) கோடைக்கானல் பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டுமே கடன் வழங்கப்பட்டு வருவதால், கோடைக்கானல் பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடுவதை மேம்படுத்துவதற்காகத் தற்போது ஏக்கருக்கு ரூ. 800 என்னும் வீதத்தில் குறுகிய காலக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டு வருகின்றன. ஓசூர் பகுதியில் துறைவாரியாக ஏக்கருக்கு ரூ. 400 என்ற வீதத்தில் வழங்கப்பட்டு வருகிற கடன் தொகை 17—7—1969 முதல் ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது எனினும், கடன் தொகையை ரூ. 900-க்கு உயர்த்துவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.